ததைத் தொடர்ந்து, அது பரிசீலிக்கப்பட்டுக் கொண்டு இருக்கிறது. எனவே தற்போது ஊதியத்தை உயர்த்துகிற திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மேம்பாட்டுக் கழகத்தில் பணியாற்றுகிற பெண்களிலே ஏறத்தாழ 100-க்கு அதிகமானவர்கள் ஊனமுற்றவர்களாகவும், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாகவும் இருக்கிறார்களே, அதைக் கருத்தில் கொண்டாவது அவர்களுக்கு நல்ல வேலைவாய்ப்புக்கான அந்த ஒர்க்கிங் கண்டிசன்களை எல்லாம் நன்றாக மாற்றிக் கொடுத்து ஊதியத்தை நியாயமான முறையில் நிர்ணயம் செய்து அவர்களுக்கும் சமநீதி வழங்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நடைபெற்றுக் கொண்டு இருக்கிற ஒரு தொழிற்கூடம் அல்ல. இது ஒரு பயிற்சி நிறுவனம். பயிற்சி முடிந்ததற்குப் பிறகு, அந்தப் பெண்களை வெவ்வேறு துறைகளிலே பணியில் அமர்த்துவதற்கான ஏற்பாட்டைக் கடந்த காலத்தில் செய்து இருக்கவேண்டும். அவர்கள் செய்யத் தவறியதினுடைய விளைவு, பயிற்சி பெற்ற இடத்திலேயே தொடர்ந்து அந்தப் பெண்கள் 60 பேர்கள் பணியாற்றிக் கொண்டு இருக்கிறார்கள். எனவே அவர்களுக்கு இருக்கிற நிலையை உணர்ந்துதான் அவர்களை அரசுத் துறையில் வேறு அச்சகங்களில் பணியிலே அமர்த்திக் கொள்வதற்கான பரிசீலனையை இந்த அரசு இன்றைக்கு மேற்கொண்டு இருக்கிறது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வத்தலக்குண்டு அரசு மருத்துவமனைக்கு இருதய நோய் சிகிச்சைப் பிரிவு

* 4005—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வத்தலக்குண்டு அரசு மருத்துவமனைக்கு இருதய நோய் சிகிச்சைப் பிரிவு வேண்டுமென்ற கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?